**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**
**ந.க.எண். 1621 /DC3/ஒபக/2024, நாள்: 19.10.2024**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம் – பள்ளிக் கல்வி – அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி (SISF) – 2025 – பள்ளி / மாவட்ட அளவில் நடத்துதல் – சார்பு.

பார்வை : தமிழ்நாடு, பள்ளிக் கல்வித் துறை, பள்ளிக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006, ந.க.எண்:042345/எம்2/இ2/2024, நாள்:10.10.2024.

------

பார்வையில் காணும் அரசுக் கடித்ததின்படி முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 15 ஐ "இளைஞர் எழுச்சி நாளாக" கொண்டாடுப்பட உள்ளது. எனவே, பள்ளி, மாவட்டம் மற்றும் மாநில அளவில் அறிவியல் போட்டி நடத்திட அறிவுரை வழங்கப்படுகிறது.

மேலும் தென்னிந்திய அறிவியல் கண்காட்சி என்பது அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கான வருடாந்திர நிகழ்வாகும். அனைத்து 6 தென்மாநிலங்களும் பல்வேறு அறிவியல் கருப்பொருள்களில் கண்காட்சிகளுடன் பங்கேற்கின்றன. பங்கேற்றவர்கள் அந்தந்தமாநில அரசுகளால் நடத்தப்படும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் வெற்றிப் பெற்றவர்களாவர். SISF அருங்காட்சியகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு 6 தென்மாநிலங்களையும் ஒருங்கிணைத்து கண்காட்சியில் பங்கேற்கின்றனர். இம்மண்டல நிகழ்வு 1981–1982 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு சுழற்சி அடிப்படையில் நடத்தப்படுகின்றது. இந்த ஆண்டு பள்ளிக்கல்வி இயக்ககம், புதுச்சேரி SISF–2025–யை ஜனவரி–2025 முதல் வாரத்தில் நடத்திட ஒப்புக் கொண்டுள்ளது. சரியான இடம் மற்றும் அட்டவணை சரியான நேரத்தில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய அறிவியல் கண்காட்சி 2025–க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 3 வெவ்வேறு வகைகளில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் இருந்து அதிகபட்சம் (35) முப்பத்தைந்து கண்காட்சிகள் தேர்தெடுக்கவும். 8 முதல் 10 வகுப்பு முடிய படிக்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க தகுதியுடையவர்கள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தனிப்பட்ட வகை (ஒரு மாணவர் + ஒரு ஆசிரியர்) = 15 கண்காட்சிகள்.
2. குழு வகை (2 மாணவர்கள் + ஒரு ஆசிரியர்) = 10 கண்காட்சிகள்.
3. ஆசிரியர் வகை (ஒரு ஆசிரியர் மட்டும்) = 10 கண்காட்சிகள்.

இக்காண்காட்சியானது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் இருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல், கணிதம், பூமி மற்றும் விண்வெளி அறிவியல், சுற்றுச் சூழல் அறிவியல், பொறியியல், உயிரியியல் / உயிர் வேதியியல் மற்றும் கணினி அறிவியல்.

மேற்கண்ட விதிகளின்படி,

| | | |
|---|---|---|
| பள்ளி அளவில் | – | 20.10.2024 முதல் 28.10.2024 வரை |
| வட்டார அளவில் | – | 01.11.2024 முதல் 08.11.2024 வரைஎ |
| மாவட்ட அளவில் | – | 10.11.2024 முதல் 20.11.2024 வரையிலும் |

கண்காட்சி நடத்திடவும் அதில் வெற்றிப் பெற்றவர்களில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவிகள் மட்டும் மாநில அளவில் நடைபெறவிருக்கும் கண்காட்சியில் பங்கேற்க இயலும் என்பதையும் மாநில அளவிலான கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் நாள் பின்னர் தெரிவிக்கப்படும் என்ற விவரத்தினை தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அறிவியல் கண்காட்சிகளில் 9 ஆம் வகுப்பு மாணவிகள் மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவிகள் பங்குபெறும் பொழுது செலவினத்தை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் / பள்ளி மேலாண்மைக் குழு மூலம் செலவினத்தை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வானவில் மன்ற போட்டிகள் நடத்தப்படும் பொழுது இப்போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தவும் என அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
18/10/24 வேலூர் மாவட்டம்.

பெறுதல் :

1. அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.